**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

(2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், ஐப்பசித் திங்கள் 19 ம் நாள்)

இ.ம.எண். 2/2024

in

அ.வ.எண். 5/2024

1. தலைவர், கத்தாங்கன்னி கிராம பஞ்சாயத்து,
   கத்தாங்கன்னி பஞ்சாயத்து, காங்கயம் வட்டம்
2. வட்டாட்சியர், காங்கயம்
3. நகர்புற மற்றும் ஊரக திட்டமிடல் அலுவலர், திருப்பூர்
4. கிராம நிர்வாக அலுவலர், கத்தாங்கன்னி கிராமம், காங்கயம் வட்டம்

... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. வசந்தி
2. பழனியம்மாள்
3. பழனாத்தாள்
4. நஞ்சம்மாள்
5. ஈஸ்வரி
6. சாந்தி

.... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 17.10.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.V.முருசேகன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சிவரஞ்சித், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும்,

இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் கடந்த 11.06.2024 ம் தேதியில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்கள் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7ன் படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியாவார். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

ii) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்ய கடந்த 11.06.2024 ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்ததில் மேற்படி வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் பெற்றும் அதன்படி தாவா சொத்தின் விபரங்கள் குறித்து வருவாய்துறை அதிகாரிகளிடம் விளக்கம் பெற்றும் மனுதாரர்கள் அலுவலக ஆவணங்களை தங்கள் வழக்கறிஞர் கொடுத்து விளக்கம் பெற்று எதிர்வாதம் தயார் செய்து மேல் அதிகாரிகளிடம் ஒப்புதல் பெற்று தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது.

iii) அதனால் மேற்படி அசல் வழக்கில் கடந்த 11.06.2024 ம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் மனுதாரர்களுக்கு தெரிய வந்தது. மனுதாரர்கள் வேண்டுமென்றோ, அஜாக்கிரதையாகவோ இருக்கவில்லை. அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு எதிர்வாதத்தை எடுத்துரைக்க வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. எனவே கடந்த 11.06.2024 ம் தேதியில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட ஒருதலைப்பட்ட உத்தரவை ரத்துசெய்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

i) மனுதாரர்கள் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டியது.

ii) அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் தாக்கல் செய்ய கடந்த 11.06.2024 ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்த சமயத்தில் மேற்படி வழக்கு சம்மந்தமான ஆவணங்கள் பெற்றும், அதன்படி தாவா சொத்தின் விபரங்கள் குறித்து வருவாய் துறை அதிகாரிகளிடம் விளக்கம் பெற்றும், அலுவலக ஆவணங்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் வழக்கறிஞர் கொடுத்து விளக்கம் பெற்று எதிர்வாதம் தயார் செய்து மேல் அதிகாரிகளிடம் ஒப்புதல் பெற்று தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு விட்டது என்றும்,

அதனால் மேற்படி வழக்கில் கடந்த 11.06.2024 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறும் சங்கதிகள் அனைத்தும் பொய்யான சங்கதிகளாகும்.

iii) மேலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிய வந்த பின்னிட்டு இம்மனுவை தாக்கல் செய்வதாக கூறியுள்ள சங்கதிகளை தகுந்த ஆதார ஆவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கும் கடமை மனுதாரர்களையே சார்ந்ததாகும். அசல் வழக்கில் கடந்த 11.06.2024 ம் தேதியில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாதால் ஏற்பட்ட ஒரு தலைப்பட்ச உத்திரவை ரத்து செய்ய கோரும் பரிகாரத்திற்கு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அருகதையற்றவர்கள் என்றும், மேற்படி உத்தரவானது அவசியமானதும், நியாயமானதும் அல்ல.

iv) அசல் வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணைகள் சார்வு செய்யப்பட்டதற்கு பின்னிட்டு வழக்கை வேண்டுமென்றே காலதாமதப்படுத்த வேண்டியே மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்து வந்துள்ளார்கள். மேலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பிரதிவாதிகளுக்கு போதிய கால அவகாசம் அளித்தும் நீதிமன்றத்தின் ஆணையினை சற்றும் பொருட்படுத்தாமல் அலட்சியமாக இருந்து கொண்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வேண்டுமென்றே எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்கள். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிருரை சுருக்கமாகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

## 5. தீர்வு:–

6. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் பெற்றும் அதன்படி தாவா சொத்தின் விபரங்கள் குறித்து வருவாய்துறை அதிகாரிகளிடம் விளக்கம் பெற்றும் மனுதாரர்கள் அலுவலக ஆவணங்களை தங்கள் வழக்கறிஞர் கொடுத்து விளக்கம் பெற்று எதிர்வாதம் தயார் செய்து மேல் அதிகாரிகளிடம் ஒப்புதல் பெற்று தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும் எனவே கடந்த 11.06.2024ம் தேதியில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட ஒருதலைப்பட்ட உத்தரவை ரத்துசெய்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பிரதிவாதிகளுக்கு போதிய கால அவகாசம் அளித்தும் நீதிமன்றத்தின் ஆணையினை சற்றும் பொருட்படுத்தாமல் அலட்சியமாக இருந்து கொண்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வேண்டுமென்றே எதிர்வழக்குரை தாக்கல்

செய்யாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்கள் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதிய வாய்ப்பளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 11.06.2024 அன்று 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு கடந்த 29.07.2024 அன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு போதிய கால அவகாசம் அளித்தும் நீதிமன்றத்தின் ஆணையினை சற்றும் பொருட்படுத்தாமல் அலட்சியமாக இருந்து கொண்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வேண்டுமென்றே எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் காலம் தாழ்த்தி வந்ததால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மனுதாரர்கள் இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை

என்பதாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024–ம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2024.11.05 18:54:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2024.11.05 18:54:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.